## அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் இடம்பெற்றுள்ள சமத்துவம், மதச்சார்பின்மை எனும் சொற்கள் நீக்கப்பட்டால்

# மக்களாட்சிக் கட்டமைப்பு அடிக்கல் இன்றி தகர்ந்துவிடும்!

## இந்திய அரசியலமைப்பு சட்டம் –75வது ஆண்டு கொண்டாட்டம் குறித்த விவாதத்தில் பங்கேற்று –

## மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கடும் கண்டனம்!

புதுடெல்லி,டிச.16-

**“அரசியலமைப்புச் சட்ட முகப்புரையில் இடம் பெற்றுள்ள சமத்துவம், மதச்சார்பின்மை எனும் சொற்கள் நீக்கப்பட்டால் மக்களாட்சிக் கட்டமைப்பு அடிக்கல் இன்றி தகர்ந்துவிடும்” என்று நாடாளுமன்ற மக்களையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து உணர்ச்சி உரையாற்றினார்.**

இந்திய அரசியலமைப்பு சட்டம் இயற்றப்பட்டு 75 ஆண்டுகள் ஆனதை நினைவு கூரும் முகத்தான் 26.11.2024 அன்று குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். ஆனால், வழக்கத்துக்கு மாறாக நாடாளுமன்றத்தில் குடியரசுத்தலைவர் உரை மீதான விவாதம் குறித்து தகவல் இல்லாத நிலையில் தி.மு.க. மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு விவாதம் நடத்தக் கூறி மக்களவை தலைவர் ஓம் பிர்லாவுக்கு கடிதம் எழுதினார். அதில் குடியரசுத் தலைவர் தனது உரையில் அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரையில் இடம்பெற்ற மதசார்பின்மை மற்றும் சமத்துவ கொள்கைகள் பற்றிய கருத்துக்கள் எதுவும் இல்லாததையும் சுட்டிக்காட்டி அது குறித்த விவாதமும் நாடாளுமன்றத்தில மேற்கொள்ளபட வேண்டுமென வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து 13.12.24 மற்றும் 14.12.24 ஆகிய இரு நாட்களில் விவாதம் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. மக்களவைக் குழுவின் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் 13.12.2024 அன்று இந்திய அரசியலமைப்பு சட்டம் -75வது ஆண்டு கொண்டாட்டம் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரைவருமாறு:

“சபாநாயகர் அவர்களே, இந்தியா நாடாளுமன்றத்தின் மேல் பயங்கரவாதிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதலுக்கு எதிராக போராடி 13.12.2001 அன்று உயிர் நீத்த பாதுகாப்பு அதிகாரிகள் அனைவருக்கும் முதற்கண் எனது அஞ்சலியைத் தெரிவிக்கிறேன்.

### இதயமும் உயிரும் இல்லாத குடியரசுத் தலைவர் உரை!

குடியரசுத் தலைவர் அவர்கள் அன்று ஆற்றிய உரையை மிகுந்த கவனத்துடன் செவி மடுத்தேன். அமைச்சரவையினால் இயற்றப்பட்ட அந்த உரை குடியரசு தலைவரிடம் வழங்கப்பட்டு அதன் பின்னர் தான் அவர் அதனை நாடாளுமன்ற இரு அவைகளின் இணைந்த கூட்டத்தில் படித்தார்.

(“நீங்கள் நீண்ட காலம் கேபினட் அமைச்சர் பதவியில் இருந்ததால் இந்த விவரம் உங்களுக்கு நன்கு தெரியும்” என அந்நேரம் அவைத் தலைவராக வீற்றிருந்த ஜகதம்பா பால் அவர்கள் டி.ஆர்.பாலுவைப் பார்த்து குறிப்பிட்டார்)

குடியரசு தலைவர் உரை தொடர்பான இந்த நடைமுறை தகவலைத் தெரிவிக்கும் பொருட்டே நான் இதனைக் குறிப்பிட்டேன். உண்மையில், குடியரசுத் தலைவரின் உரை இதயமும் உயிரும் இல்லாமல் இருந்ததைத் தான் காண முடிந்தது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். அரசியலமைப்பு சட்டத்தின் முகவுரையில் (Preamble) சோஷலிஸ்ம் மற்றும் செக்யூலர், அதாவது சமத்துவ, மதசார்பற்ற என்ற அதிமுக்கியமான அம்சங்கள் உள்ளன. ஆனால் இந்த இரு சொற்களும் குடியரசுத் தலைவரின் பேச்சில் இடம் பெறவில்லை.

குடியரசுத் தலைவரின் பேருரை அச்சிடப்பட்டு நூல் வடிவில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. குடியரசு தலைவர் அவர்கள் உறுப்பினர்களின் கூட்டத்தில் பேசிய போது இந்த சொற்கள் உச்சரிக்கப்படவில்லை. இதற்காக குடியரசுத் தலைவரிடம் நான் குறைகாண விரும்பவில்லை. ஆனால், இந்த அரசுக்கு சோஷலிசமும் சமத்துவமும் அவ்வளவு அலர்ஜி அதாவது ஒவ்வாமையைத் தருகிறது. இதைத் தான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

### நாட்டை வழிநடத்தும் முக்கிய ஆவணம்!

மதசார்பின்மை, சமத்துவம் என்ற சொற்கள் அரசியலமைப்பு சட்டத்தின் முகவுரையில் பொறிக்கப்பட்டுள்ள வெறும் வார்த்தைகள் அல்ல; மாறாக மக்களாட்சி, சமதர்மம் மற்றும் அனைவரையும் இணைத்துக் கொள்ளும் இந்தியாவின் விழுமிய கண்ணோட்டத்தின் உருவகமாகும். அரசியலமைப்பு சட்டம் என்பது மக்களுக்கான சட்டவிதிகள், உரிமைகள் மற்றும் கடமைகளின் பட்டியல்களைத் தொகுத்து எழுதப்பட்ட புத்தகம் அல்ல. அது, விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் தலைமுறை தலைவர்களின் தொலைநோக்குப் பார்வைகள் உருவாக்கிய நாட்டை வழிநடத்தும் முக்கியத்துவம் நிறைந்த ஆவணம் ஆகும்.

‘சோஷலிஸம் ‘ மற்றும் ‘ செக்யூலர்’ ஆகிய பதங்கள் இரண்டும் 1976 ஆம் ஆண்டில் நாடாளுமன்றம் இயற்றிய சட்ட திருத்தம் வாயிலாக அரசியலமைப்பு சட்டத்தின் முகவுரையில் சேர்க்கப் பட்டன. இந்த திருத்தம் செய்யப்படும் முன்பே மதச்சார்பின்மையின் அம்சங்கள் அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை அங்கமாக பொதிந்து தான் இருந்தது. அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவுகள் 25,26 மற்றும் 27 மதச்சார்பின்மையை போற்றி வளர்த்திடும் சிறப்பான நோக்கில் எழுதப்பட்டவை. மதச்சார்பின்மை விழுமியம் அரசியலமைப்பு சட்டத்தில் ஏற்கனவே உள்ளார்ந்து அமைந்துள்ளது. இருப்பினும், 14, 15 மற்றும் 16 உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் மதத்துவேஷத்துக்கு தடை விதிப்பதுடன் அனைவருக்கும் சமமான பாதுகாப்பையும் வேலை வாய்ப்புகளையும் உறுதி செய்து மதச்சார்பின்மை சாராம்சத்தை தன்னகத்தே கொண்டு திகழ்கிறது.

சமத்துவம், மதச்சார்பின்மை எனும் சொற்கள் இந்திய நாட்டின் ஜனநாயகம்மற்றும் ஆட்சி முறையையும் வழிநடத்தும் மதிப்பு மிக்க அடிப்படைக் கூறுகளை பிரதிபலிக்கிறது என்பது தான் பெருமைக்குரிய ஒன்றாகும். எனவே, முகப்புரையில் சேர்க்கப்பட்டுள்ள இவை வெறும் அடையாளம் மட்டுமே அல்ல. மாறாக, நேர்மையான, நியாயமான மற்றும் அனைவரையும் அணைத்துச் செல்லும் இந்திய சமுதாயத்தின் உறுதியை இவை அடிக்கோடிட்டு காட்டுகிறது. இந்த வார்த்தைகள் நீக்கப்பட்டால் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் ஆவி அழிக்கப்பட்டு விடும் என்பது மட்டுமல்ல தேசத்தின் ஒழுக்கம்சார் மக்களாட்சி கட்டமைப்பு அடிக்கல் இன்றி தகர்ந்துவிடும்.

### திராவிட மூதாதையர் விட்டுச் சென்ற உரிமைக் கொடை!

தலைவர் அவர்களே, இன்றைய நாள் 13.12.2024 என்பதை



அறிவீர்கள். அரசியலமைப்பு சட்டம் தலையாய அங்கமான முகப்புரையில் இடம் பெற்றுள்ள வார்த்தைகளான, ‘சோஷலிஸ்ட்’ மற்றும் ‘செக்யூலர்’ குறித்து இன்று விவாதம் மேற்கொண்டுள்ளது. 1946 ஆம் ஆண்டில், இதே நாளில் தான் (13.12.1946) இந்த சொற்றொடர் விவாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அன்று, நெடிய விவாதங்களுக்குப் பின்னர் இந்த இரு கருத்துக்களும் சேர்க்கத் தேவை இல்லை என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், முப்பது ஆண்டுகள் கழித்து, 1976 ல், இந்த இரு கருத்துக்களும் அரசியலமைப்பு சட்டத்தில் தெள்ளத் தெளிவாக இடம் பெறுதல் அவசியம் என்று நிரூபிக்கப்பட்டது. அந்த முடிவான எண்ணம், 1976 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசியலமைப்பு திருத்த சட்டத்தின் மூலம் நனவானது.

இந்தப் பின்புலத்தில், நமது சமுதாயம் சமத்துவ சமதர்ம சமுதாயமாக மேம்பட வேண்டும் என்ற லட்சிய நோக்கில், டாக்டர் நடேச முதலியார், சர்.பிட்டி தியாகராயர், திரு.டி.எம்.நாயர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட திராவிட மூதாதையர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள உரிமைக்கொடை குறித்து இங்கு குரல் எழுப்ப விரும்புகிறேன்.

### வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம்!

அந்த மூதாதையர்கள் ஈந்த அரிய காலக் கொடையாம் திராவிட தீபத்தை இன்று உயர்த்தி ஏந்திச் சென்று அந்த முன்னோடித் தலைவர்களின் கனவுகளை எல்லாம் நனவாக்கும் பெரும் பயணத்தை இன்று முன்னெடுத்துச் செல்கிறார் என் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.நேற்றுக் கூட, அதாவது 12.12.2024 ஆம் நாளில், கேரளாவில் உள்ள வைக்கம் நகர் சென்று தந்தை பெரியார் அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவகத்தை திறந்து வைத்துள்ளார்.அந்த வைக்கம் நகரில் தான் உள்ள கோயில் தெருக்களில் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் நுழைய தடை செய்யப்பட்டிருந்தது.

சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு 1924 ஆம் ஆண்டில் தான் தந்தை பெரியார் அவர்கள் இந்தத் தடைக்கு எதிராக நீண்ட போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்து அனைத்து சாதி மக்களும் கோயிலின் உள்ளே செல்லும் உரிமையாம் சமூக நீதியைப் பெற்று தந்த மாபெரும் பெருமை நிறைந்த வேளையாகும் அது. நம் நாட்டில் மதசார்பற்ற சமத்துவ சமுதாயத்தை நிறுவிட முனைந்த ஒளி வீசும் திராவிட இயக்கத்தின் பெருமைக்குரிய வரலாறு 108 ஆண்டுகள் ஆகும். மதச்சார்பின்மை மற்றும் சமத்துவம் என்ற உயரிய லட்சியங்கள் சமூக நீதியின் இதயமும் உயிரும் என்று சொன்னால் மிகையாகாது. திராவிட பாரம்பரியக் கொடை என்பது ஒடுக்கப்பட்ட, பெரும்பான்மையான கோடிக்கணக்கான இந்து சமய மக்களுக்கு அரசின் கல்வி, வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு என்பதுடன் அரசியல் விடுதலையுடனும் தொடங்கியது.

இந்த நூறாண்டுக் காலப் போராட்டம், நாடு விடுதலை பெற்று 77 வருடங்கள் உருண்டோடிய பிறகும் இன்னும் இன்றளவும் தொடர்கிறது. இந்த சந்தர்ப்ப சூழலில் தான் மதச்சார்பின்மையும் சமத்துவமும் புதிய முக்கி யத்துவம் பெற்றுள்ளது.எனவே தான், இன்றைய அரசுகள் இந்த இரு விழுமிய கொள்கைகளையும் உணர்வுடனும் உயிர்ப்போடும் செயல்படுத்த உறுதிப்பாட்டுடன் உள்ளோம் என்பதை மக்களுக்கு நிரூபித்துக் காட்ட கடமைப்பட்டுள்ளன.

### குடியரசுத் தலைவரின் உரை மீது முழுமையான விவாதம்!

இந்த இரு கொள்கைகளிலும் அரசு தடுமாறுகிறது என்பதால் தான் இதனைச் சொல்கிறோம். கண்கூடாகத் தெரியும் அரசின் இந்தத் தடுமாற்றமும் தயக்கமும் குடியரசுத் தலைவரின் உரையில் இருந்து தெளிவாகக் காணப்படுகிறது.அந்த உரை அரசின்பொய்யான உறுதிப்பாட்டையும் விருப்பம் இன்மையையும் வெளிப்படையாகவும் வலுவாகவும் தெரிவிக்கின்றது. அதனால் தான் இந்த வாக்குறுதிகள் குடியரசு தலைவரின் பேச்சில் உறுதிபடவும் பட்டவர்த்தனமாகவும் கூறப்படவில்லை. எனவே, 75 வது அரசியலமைப்பு சட்ட நாள் தொடர்பான விழா நிகழ்ச்சியை இந்த அரசு ஒரு வெற்று அடையாளமாகவே பார்க்கிறது என்ற எங்கள் உணர்வுகள் நியாயமானவையே. இதன் பொருட்டே குடியரசு தலைவர் உரை மீது விரிவான முழுமையான விவாதம் நாடாளுமன்றத்தின் அவையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவைத் தலைவரிடம் திராவிட முன்னேற்றக் கழகம் கோரிக்கை விடுத்தது.

### இந்திரா காந்தி கொண்டுவந்த அரசியமைப்புத் திருத்தச் சட்டம்!

நமது அரசியலமைப்பு சட்டம் முதன் முதலாக 1949 ல் ஏற்கப்பட்ட போது சமத்துவம் மற்றும் மதச்சார்பின்மை கொள்கைகள் இடம் பெறவில்லை. அது தொடர்பான விவாதம் நடந்த போதிலும் அவை தவிர்க்கப்பட்டன.

ஆனால், சுதந்திர இந்தியாவில் நமது பயணத்தில் இருந்து அரசியலமைப்பு சட்டத்தில் இந்தக் கொள்கைகள் சேர்க்க வேண்டியதின் கட்டாயத்தை நாம் பலமாக உணர்ந்தோம். அதன் விளைவாக அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கருவியாக செயல்பட்டு அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரையிலேயே இந்த இரு தத்துவங்களை சேர்க்கும் வகைசெய்த 42 வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தை கொண்டு வந்தார்.

### முதல் சட்டத்திருத்தத்திற்கு வித்திட்ட திராவிட இயக்க மூதாதையர்!

இந்த இடத்தில் , 1951 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு சட்டம் மீதான முதல் திருத்தம் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு கல்வி வேலை வாய்ப்புக்களில் இட ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யும் திருத்தம் தான் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த முக்கியமான திருத்தத்துக்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் திராவிட இயக்கத்தை நிறுவிய அதன் மூதாதையர்கள் என்பது தான் உண்மை. ஏனெனில், சமுதாயம் சார்ந்த இட ஒதுக்கீடு வழங்கி அதற்கான ஆணையை 1920 ஆம் ஆண்டிலேயே பிறப்பித்தது அன்றைய மெட்ராஸ் மாகாணத்தின் ஆட்சி பொறுப்பில் இருந்த நீதிக் கட்சி அரசாகும். சமுதாய ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காக இந்த மாபெரும் சாதனை தனை இந்தியா விடுதலை அடையும் முன்பே திராவிட இயக்கம் நிகழ்த்திக் காட்டியது. இந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த சாதனை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே நிகழ்த்தப்பட்டது என்பது தான் சிறப்புக்குரியதாகும். இந்த தொலைநோக்கு சிந்தனை, ஆதிக்க அமைப்பின் காலடியில் மிதிபட்டுக் கிடந்த தென்னிந்திய மக்கள் மட்டுமன்றி ஒட்டு மொத்த இந்திய மக்களும் பயனடையக் காரணமாக இருந்தது என்பது எங்கள் திராவிட மூதாதைத் தலைவர் பெருமக்களின் அரசியல் ஞானம் விளைவித்ததுதான். சோஷலிஸம் எனப்படும் சமத்துவ சித்தாந்தம் இன்றைய காலகட்டத்திலும் உயரிய விலைமதிப்பு கொண்டது.

அடுத்த படியாக, மதச்சார்பின்மை தொடர்பாக திரும்ப வருவோம். அரசியலமைப்பு சட்டம், பிரிவு 15 (1) இது குறித்து என்ன சொல்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.அந்தப் பிரிவின் வாசகங்களை அப்படியே இங்கே படித்து காட்டுகிறேன்.

எந்த ஒரு குடிமகனையும், மதம், இனம், ஜாதி, பிறப்பிடம், ஆகிய இவற்றில் எந்த ஒரு அடிப்படையிலும் வைத்து அரசு வேறுபாடு காட்டக் கூடாது “

ஆனால் இன்று எழுந்துள்ள முக்கியக் கேள்வி இதுதான்: இத்தனை ஆண்டு காலத்தில், அரசியலமைப்பு சட்டத்தின் இந்த கட்டளையை அரசு உறுதிசெய்துள்ளதா? ஒரிசாவில் என்ன நடந்தது? அங்கே பாதிரியார் கிரஹாம் ஸ்டேய்ன் அவர்களுக்கு என்ன நடந்தது? தூங்கும் போது அவர் உயிரோடு எரித்து கொல்லப்பட்டாரே. எத்தனை எத்தனை வழிபாட்டு தலங்கள் இடித்து தரைமட்டம் ஆக்கப்பட்டன என்ற விவரங்கள் அனைத்தையும் உலகம் அறியும். குஜராத்திலும் இன்னும் பிற மாநிலங்களிலும் கும்பல் வன்முறைவினால் தாக்குதலுக்கு ஆளாகி சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுகள் பல அரங்கேற்றப்பட்டன.

கும்பல் வன்முறை வெறித்தாக்குதலுக்கு கொடூரமான உதாரணம் தான் தமிழ்நாட்டின் எங்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களைத் தாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி. அவர் வீடு தீவைத்துக் கொளுத்தப்பட்டது.மதவெறி காரணமாகத் தானே இந்த கொடிய நிகழ்ச்சி நடந்தது. மேலும், மொழி உரிமைகள் நசுக்கப்படுகின்றன.இன்றுள்ள சூழல் 1976ல் இருந்த நிலையை விட மோசமாக இருக்கிறது. சிறுபான்மை சமுதாய மக்கள் தாங்கள் கைவிடப்பட்டுவிட்டோம் என்ற வலுவான உணர்வில் உள்ளனர். தங்களது வாழ்வாதாரம் கடும் ஆபத்தில் உள்ளது என்ற கடும் அச்சத்தில் உள்ளனர்.

### கடிந்துகொண்ட உச்சநீதிமன்றம்!

எனவே தான், இந்த இரண்டு விழுமியங்களை (மதச்சார்பின்மை மற்றும் சமத்துவம்)காப்பாற்ற அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை வெளிப்படையாக நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகிறோம். இத்தகைய நிலையில் மாண்புமிகு குடியரசு தன் தலைவர் அவர்கள் தமது உரையில் மதச்சார்பின்மையையும் சமத்துவத்தையும் நிலை நாட்ட அரசு கடமைப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்தால் அது ஒரு நல்ல “சிக்னலாக” செய்தியாக அமைந்து நமது 145 கோடி மக்களும் நன்னம்பிக்கை உணர்வுடன் நிம்மதி அடைந்திருப்பார்கள். இது இத்தனை முக்கியமாக பார்க்கப்படுவதற்குக் காரணம், குடியரசு தலைவர் உரை நிகழ்த்தியதற்கு முந்தைய நாள்தான், அதாவது 25.11.2024 ஆம் தேதியன்று, இந்த விஷயத்தில் உச்ச நீதிமன்றம் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது. அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரையில் உள்ள சோஷலிஸ்ட் மற்றும் செக்யூலர் என்ற சொற்கள் அகற்றப்படவேண்டும் என்று தொடுக்கப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. பாரபட்ச உணர்வுகளால் உந்தப்பட்டு, 42 வது அரசியலமைப்பு சட்டம் திருத்தம் செல்லாது என்று அறிவிக்க கோரி 44 ஆண்டுகள் கழித்து வழக்காடிய மனுதாரர்களை உச்ச நீதிமன்றம் கடிந்து கொண்டது.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு தான் குடியரசு தலைவர் தமது உரையில் இந்த இரு கொள்கைகளையும் பாதுகாக்க அரசு எவ்வித தடுமாற்றமும் இல்லாமல் உறுதி கொண்டு உள்ளது என்று குறிப்பிட்டிருந்தால் 145 கோடி மக்களும் சந்தேகத்துக்கு இடமின்றி அமைதி அடைந்திருப்பர் என்று நாங்கள் திடமாகக் கருதுகிறோம்.

300 ஆண்டுகள் மொகலாயர் ஆட்சியையும் 200 ஆண்டுகால பிரிட்டிஷ் ஆட்சியோடு ஒப்பிடும்போது 75 ஆண்டுகள் சுதந்திர இந்தியாவின் ஆட்சி என்பது நீண்ட கால ஆட்சி அல்ல.

சென்ற 75 வருடங்களில் பல்வேறு ஏற்ற இறக்கங்களுடன் நமது இந்திய வரலாறு அமைந்துள்ளது. எனவே, இந்த தருணத்தில் நாம் சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டியது அவசியம். இதனை கருத்தில் கொண்டு தான் இந்த விஷயத்தில் நாடாளுமன்றத்தில் இது குறித்த விவாதம் நடைபெறவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தோம்.அந்த விவாதம் இன்று நிகழ்கிறது.

எங்கள் கட்சியின் சார்பாகவும் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாகவும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் சிற்பி டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு ஆழ்ந்த நன்றியையும் வீர வணக்கத்தையும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். தமிழ் நாட்டைச் சேர்ந்த தலைவர்களான பொப்பிலி ராஜா, விடுதலை போராட்ட வீரர் கக்கன், சாமிநாதன், டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியார், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, கோபால்சாமி ஐயங்கார், ராஜாஜி,இலட்சுமி காந்தன்பாரதி,அல்லாடி கிருஷ்ணசாமி, பெருந்தலைவர் காமராஜர், ஓ.வி.அளகேசன் உள்ளிட்ட ஏனைய தலைவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் உரையாற்றினார்.